هذه تهنية لافتتاح بنية صوفي منزل لمجلس حزب الله في بلدة قاهرفطن، صانها الله من الآفات والفتن، انشاءها الفقير حادم القوم شيخ عبد القادر الصوفي القاهري، تغمده الله بلطفه الفاطوي سنة خمس وتسعين بعد الف وثلاثمائه من هجرة النبي عليه وعلى آله واصحابه افضل الصلوات وزكي التليمات.

**காயல்பட்டினம் ஹிஸ்புல்லாஹ் சபை ஸூபி மன்ஸில் திறப்பு விழா வாழ்த்துப் பாடல்கள்:**

**பாடியவர்கள்: காதிமுல் கவ்மி ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி காஹிரி (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்) அவர்கள்,**

**திறப்பு விழா ஆண்டு: ஹிஜ்ரி 1395**

لَكَ الْحَمْدُ يَا اللهُ فِيْ كُلِّ لَحْظَةٍ

عَلٰى كُلِّ نَعْمَا وَانْتِفَاءِ الْبَلِيَّةِ

ஆண்டவனே சகல நிஃமத்களின் பேரிலும், இன்னும் சகல பலாய்களும் தட்டுண்டு போவதின் பேரிலும் ஒவ்வொரு சனத்திலும் சகல புகழும் உனக்கே உரித்தானதாகும்.

حَبَوْتَ لِاَهْلِ اللهِ حِزْبِكَ بِنْيَةً

بِقَاهِرِفَتَنٍ ذَاتِ شَرَفٍ وَعِزَّةٍ

சிறப்பும், மதிப்புமுடைய காயல்பட்டணத்தில் உன்னுடைய கூட்டமாகிய அஹ்லுல்லாஹ்களுக்கு ஒரு கட்டிடத்தைக் கொடுத்தாய்.

اُوْلٰئِكَ حِزْبُ اللهِ اَلَا اِنَّ حِزْبَهُ

هُمُ الْمُفْلِحُوْنَ الْفَائِظُوْنَ بِجَنَّةِ

அவர்கள் அல்லாஹ்வின் கூட்டத்தார்கள். நிச்சயமாக அவனின் கூட்டத்தார்கள் அவர்களே சுவர்க்கத்தைக் கொண்டு பாக்கியம் பெற்றவர்களும், ஜெயசீலர்களுமாவார்கள்.

وَهُمْ غَالِبُوْحِزْبِ الشَّيَا طِيْنِ اَخْبَرَتْ

وَمَنْ يَتَوَلَّ اللهَ اٰخِرُ آيَةِ

மேலும் அவர்கள் ஷைத்தானுடைய கூட்டங்களை மிகைப்பவர்களுமாகும். இதுபற்றி "எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், இன்னும் ஈமான் கொண்டவர்களையும் தங்களுக்கு காரியஸ்தர்களாக ஆக்கிக் கொண்டார்களோ அத்தகைய அல்லாஹ்வின் கூட்டத்தார்களே மிகைப்பவர்களாகும்" என்ற திருவசனத்தின் இறுதி வாக்கியம் அறிவிக்கிறது.

نُسَمِّيْ بِصُوْفِيْ مَنْزِلِ لِلتَّبَرُّكِ

بِمَنْزِلِ اَصْحَابِ النَّبِيِّ اَهْلِ صُفَّةِ

நாம் நாயகத் தோழர்களான அஹ்லு சுப்பத்வராந்தைகாரர்களுடைய ஸ்தலத்தைக் கொண்டு பரகத்தை நாடி இதற்கு "ஸூபி மன்ஸில்"என்று பெயர் வைக்கிறோம்.

(

تَخَلَّوْا لِذِكْرِ اللهِ عَنْ شُغْلِ غَيْرِهِ

بُكُوْرًا وَ اٰصَالًا وَفِيْ كُلِّ لَمَّةِ

அவர்கள் காலையிலும், மாலையிலும் ஒவ்வொரு சணமும் அல்லாஹ்வின் ஞாபகத்திற்காகவே அவனல்லாத பராக்குகளை விட்டும் தனித்திருந்தார்கள்.

بِذِكْرِ اسْمِهِ يَتَبَتَّلُوْنَ فَنَقْتَرِيْ

بِهَدْيِهِمْ نَجْفُوا الْمَنَامَ بِغَفْلَةِ

மேலும் அவனுடைய ஞாபகத்திலேயே மூழ்கி இருந்தார்கள். ஆகையினால் அவர்களுடைய நேர்மையான வழியை நாமும் பின் தொடர்ந்து நடப்போம். மறதியாக தூங்குவதை விட்டொழிப்போம்.

قِيَامًا قُعُودًا نَذْكُرُ اللّٰهَ اَوْ عَلٰى

جُنُوْبٍ بِفِكْرٍ اَجْمَعِيْنَ بِحَلْقَةِ

நின்றவர்களாகவும், உட்கார்ந்தவர்களாகவும், இன்னும் சிந்தனைகளோடும், ஒரு சாநய்துக் கொண்டும், எல்லாவர்களும் வட்டமாக கூடியிருந்து கொண்டும் அல்லாஹ்வை திக்ரு செய்வோம்.

مُرَاقِبَةٌ فِي الْقَلْبِ دَوْمًا بِهِمَّةِ

وَنَتْرُكُ خَطَوَاتٍ سِوَاهُ بِجُمْلَةِ

எப்போதும் நேமமாக முழு கவனத்தையும் கொண்டு கல்பில் அவனை முறாகபா செய்வோம். அவனல்லாத ஊசாட்டங்களை விடுவோம்.

وَنَتْلُو قُرْآنًا ثُمَّ نَقْرَأُ كَدَائِحًا

عَلَى الْمُصْطَفٰى وَالْاَوْلِيَاءِ الْاَجِلَّةِ

குர்ஆனையும் ஓதுவோம். பின்னர் முஸ்தபா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும், வலுப்பமான பாரவான்களாகிய அவ்லியாக்கள் பேரிலும் புகழ்களையும் படிப்போம்.

نُصَلِّيْ مَعَ التَّسْلِيْمِ شَوْقًا عَلَى النَّبِيِّ

اِذِالْمَرْأُ مَعَ مَنْ رَامَهُ بِالْمَحَبَّةِ

இன்னும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும் ஆசையோடு ஸலவாத்தும் சலாமும் சொல்வோம். ஏனென்றால் யார் யாரை ஆசையோடு விரும்பிக் கொண்டிருக்கிறார்களோ அவருடனேயே இருப்பார்.

وَ يَسْمَعُ صَلَاةَ الْعَاشِقِيْنَ بِنَفْسِهِ

يَرَىْ كُلَّ حِيْنٍ قَلْبَ اَهْلِ الْوِدَادَةِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்கள் பேரில் ஆசையோடு சலவாத்து சொல்கிறவர்களுடைய சலவாத்தை அவர்களே நேரில் வந்து கேட்பார்கள். ஒவ்வொரு நேரமும் ஆசையுடையவர்களுடைய கல்பை பார்ப்பார்கள்.

يَقُوْلُ اُنَاسٌ اِنَّهُ فِى الْمَدِيْنَةِ

فَقَطْ فَهُوَ غَلَطٌ بَلْ بِقَلْبِ الْاَوِدَّةِ

நாயகம் அவர்கள் மதீனாவில் மட்டுமே இருக்கிறார்கள் என்று சில ஜனங்கள் சொல்கிறார்கள். அது சுத்த தவறாகும். அவர்கள் தங்களை உகந்தவர்களுடைய கல்பிலுமிருக்கிறார்கள்.

يَكُنْ جَمِيْعَ الْوَقْتِ لِلّٰهِ ذَاكِرًا

وَلَمْ يَكُ فِيْ حَالٍ بِسَهْوٍ وَغَفْلَةِ

அவர்கள் எல்லா நேரங்களிலும் (எல்லா நிலைமைகளிலும்) அல்லாஹ்தஆலாவை திக்று செய்கிறவர்களாகவே இருப்பார்கள். ஒரு நிலைமையிலேயும் மறதியாகவும், ஞாபகமில்லாமலிருகக் வேயில்லை.

حَدِيْثُ اَنَا مَعَهُ اِنْ ذَكَرَنِيْ وَاَنَا

جَلِيْسٌ لِمَنْ اِذْ كَرُوْا بِالْمَضعِيَّةِ

அடியான் என்னை நினைக்கும்போது நான் அவனுடனேயே இருக்கிறேன். என்னை நினைக்கிறவர்களோடு நான் ஒன்றாகவே இருக்கிறவனாகும்) என்பதுஹதீது குத்ஸியாகும்.

فَبُشْرٰي اِذَا فُزْنَا بِلُقْيَا مُحَمَّدٍ

نَفُوْزُ بِلُقْيَا اللهِ مِنْ غَيْرِ رِيْبَةٍ

ஆகவே நல்மாறாயமாகவேயாகும். நாம் அருமை நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய தரிசனையைக் கொண்டு பாக்கியம் பெறுவோமானால், சந்தேகமில்லாமல் அல்லாஹுத்தஆலாவின் தரிசனையைக் கொண்டும் பாக்கியம் பெறுவோம்.

جَزَي اللهُ عَنَّا كُلَّ مَنْ وَهَبَ وَاشْتَرٰي

لَهُ الْاَرْضَ وَالسَّاعِيْ بِطِيْبِ طَوِيَّةٍ.

இதற்காக (மன்ஸிலுக்காக) நலிம் கொடுத்தவர்களுக்கும், (இதற்காக ஆஸ்திகள்) வாங்கினவர்களுக்கும் மனமுவந்து முயற்சி செய்தவர்களுக்கும்

وَمُنْفِقُهَا مَالًا لَهُمْ اَجْرُ صَدَقَةٍ

مُضَاعَفَةً تَجْرِيْ لِيَوْمِ الْقِيٰمَةِ

இன்னும் இதற்காக பொருளுதவியவர்களுக்கும், அல்லாஹுத்தஆலா எம்மை தொட்டும் நற்கூலி கொடுப்பானாக! அவர்களுக்கு கியாமத்து நாள் வரையிலும் நடக்கக் கூடியதான சகத்காவின் பன்மடங்கான நற்கூலி உண்டு.

اِلٰهِيْ قِنَا مِنْ تُرَّهَاتٍ وَحَاسِدٍ

وَمِنْ شَرِّ خَنَّاسٍ مِنْ اِنْسٍ وَجِنَّةِ

ஆண்டவனே! வீணான கருமங்களை விட்டும், பொறாமைக்காரர்(களுடைய தீங்கு)களை விட்டும், இன்னும் மனிதர்களில் நின்றும் ஜின்களில் நின்றும் குழப்பக்காரர்களை விட்டும்,

وَمِنْ شَرِّ اَهْلِ الزَّيْغِ وَالْبَغْيِ وَالرَّدٰي

وَوَفِّقْ لَنَا سُبُلَ الْهُدٰي وَالْجَمَاعَةِ

இன்னும் வழிகேடர்கள், அழிச்சாட்டியக்காரர்கள், நாசகாரர்களுடைய தீங்குகளை விட்டும் எங்களை காப்பாற்றுவாயாக! எங்களுக்கு நேர்மையான சுன்னத் ஜமாஅத்துகளின் வழியில் (நடக்க) நல்லருள் புரிவாயாக!

وَعَمِّرْ اِلٰهِيْ قَلْبَنَا وَقُلُوْبَهُمْ

بِفَيْضِ قُلُوْبٍ لِشُيُوْخِ الطَّرِيْقَةِ

ஆண்டவனே! எங்களுடைய இருதயத்தையும், அவர்களுடைய இருதயத்தையும் தரீகத்தின் ஷெய்குமார்களுடைய இருதயங்களுடைய அருளைக் கொண்டு பரிணமிக்கச் செய்வாயாக!

رِضَاءَكَ نَطْلُبُ فَارْضَ عَنَّا وَعَنْهُمْ

وَرَضِّهِمْ عَنَّا وَعَنْ كُلِّ اِخْوَةِ

(ஆண்டவனே) உன்னுடைய பொருத்தத்தை நாங்கள் தேடுகிறோம். ஆகையினால் எங்களை தொட்டும், இன்னும் அவர்களைத் தொட்டும் பொருந்திக் கொள்வாயாக. மேலும் எங்களை தொட்டும் அவர்களை பொருத்தமாக்கி வைப்பாயாக!

وَصَلِّ وَسَلِّمْ يَا رَجَائِيْ عَلَى النَّبِيْ

مُزَكِّيْ نُفُوْسِ النَّاسِ مِنْ كُلِّ وَصْمَةِ

என்னுடைய தேட்டமே! (என் நாயனே) ஜனங்களுடைய ஆன்மாக்களை எல்லாம் சகல விண்ணங்கள், தோஷங்களை விட்டும், பரிசுத்தமாக்கும்படியான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும்,

عَلَى الْآلِ وَالْأَصْحَابِ اَزْوَاجِهِ عَلٰى

عَشِيْرَتِهِ وَالْحَامِلِيْنَ لِمِلَّةِ

அவர்களுடைய கிளையார்கள், தோழர்கள், அவர்களுடைய மனைவிமார்கள், அவர்களுடைய மார்க்கத்தை தூக்கி சுமந்துக் கொண்டு பிரச்சாரம் செய்கிறவர்கள் பேரிலும் ஸலவாத்தும் சலாமும் சொல்வாயாக!

اَيَا رَبِّ صُوْفِيْ مَنْزِلٍ سَلِّمَنَّهُ

عَنِ الْهَدَمِ وَالتَّبْدِيْلِ اَرِّخْ بِفُطْنَةِ

ஸூபி மன்ஸிலின் போஷகனே! அதை இடிந்து போவதை விட்டும் (அதன் நோக்கத்தை) மாற்றுவதை விட்|டும் காப்பாற்றுவாயாக!

لِعَامِ الْبِنَا قَصْرًا مَشِيْدًا بِآجِرٍ

بَنَوْهَا بِشَوْقٍ مَعَ خُلُوْصِ الطَّوِيَّةِ

அன்பனே! இந்த துஆவின் அச்சரங்களை) சிந்தித்து பார்த்து அதை (மன்ஸிலை) கல்லால் கட்டியாக,மாளிகையாக கட்டியவ ருஷத்தை ஹிஜ்ரி 1395 என்று கணித்துக் கொள்! அவர்கள் அதை கலப்பற்ற மனதோடு பெரும் மகிழ்ச்சியாக சந்தோஷமாக கட்டியிருக்கிறார்கள்.

www.sufimanzil.org